# Ubin Tides

乌敏岛
ISSUE 6
Nov 2020 - Apr 2021
PULAU UBIN

## திரு என். சிவசோதியுடன் நேர்காணல் – உபின் தீவைக் கொண்டாடுவோம்




திரு என். சிவசோதி, சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் (NUS) உயிரியல் துறையில் மூத்த விரிவுரையாளராக இருக்கிறார். உபின் நண்பர்கள் அமைப்பு 2014-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது முதல் அதில் அவர் உறுப்பினராக இருக்கிறார். உபின் தீவு ஆய்வரங்கிலும், வாழ்விட மேம்பாடு, சிற்றினங்கள் மீட்பு, கடலோரச் சூழல் சீரமைப்பு ஆகியவற்றுக்கான FUN பணிக்குழுக்களிலும் சிவா ஈடுபட்டிருந்தார். உபின் தீவுக்கு வருவோர் பின்பற்றவேண்டிய 'உபின் வழி' என்கிற நடத்தை விதிகளை உருவாக்கிய குழுவிலும் அவர் உறுப்பினராக இருந்துள்ளார். சிங்கப்பூர் அனைத்துலகக் கடலோரத் தூய்மையாக்கத் திட்டத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளராகவும் அவர் உள்ளார். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் சுத்தம் செய்யப்படும் இடங்களில் ஒன்றாக உபின் தீவு இடம்பெறுகிறது.

### 1. உபின் தீவில் பல்லுயிரினப் பாதுகாப்பு ஆய்வையும் கல்வியையும் மேம்படுத்துவதில் உங்களுக்கு ஆர்வத்தைத் தூண்டியது எது?

நான் உயர்நிலைப் பள்ளியில் இருந்தபோது, வெளிப்புற நடவடிக்கை கல்விக்கழகத்தின் மூலம் பூலாவ் உபின் எனும் சாகசத் தீவு எனக்கு அறிமுகமானது. நான் 1980களில் உயிரியல் துறையில் பட்டக்கல்வி மாணவராக இருந்தபோது, இயற்கையைப் பற்றி தெரிந்துகொண்டு, அதன் சூழலில் மூழ்கிப்போனேன். பிறகு 1998-ஆம் ஆண்டில், மக்கள் கழகத்தின் உபின் சவாலுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த எனது படகோட்ட நண்பர்கள், மிதிவண்டி ஓட்டும் சவாலையும் நடைப்பயணச் சவாலையும் ஏற்பாடு செய்வதற்கு என்னைச் சேர்த்துக் கொண்டனர்.

நானும் பல நண்பர்களைச் சேர்த்துக் கொண்டேன். உணவு ஏற்பாடுகளில் குழப்பம், சூறைக் காற்று போன்ற பின்னடைவுகளைத் தாண்டி, உபின் தீவு எங்கள் அனைவரையும் வசீகரித்தது! NUS டொடிகேட்ஸ்-இன் தீவிர திட்டமிடுதலும் பயிற்சியும் 1999-ஆம் ஆண்டில் பெடல் உபின் நடவடிக்கையை வெற்றியடையச் செய்தன! அதனைத் தொடர்ந்து இன்றுவரை பெஸ்டா உபின் நிகழ்ச்சியின் பெருமைமிகு உறுப்பினர்களாக இருக்கிறோம். 2009-ஆம் ஆண்டில், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழலியல் படிக்கும் மாணவர்கள் அனைவரும் ஒவ்வொரு பாடத் தவணையிலும் இத்தீவுக்குச் சென்று தீவின் இயற்கைச் சூழலை ஆய்வு செய்வதை உறுதிப்படுத்தினோம்.

### 2. உபின் தீவு காலப்போக்கில் எவ்வாறு மாறியுள்ளது?

2001 ஜூன் மாதம் தீவின் கிழக்குப்பகுதி கம்பங்கள் தரைமட்டமான கடுமையான சூழலை எதிர்கொண்டோம். நிலமீட்பின் கொடுங்கரம் எங்கள் மீது வலிந்து செயற்பட்டது. நாங்கள் உடனடியாக செக் ஜாவாவின் கடல்சார் உயிரினங்களின் கணக்கெடுப்பை நடத்தி, 'இதுவே காண்பதற்கு இறுதி வாய்ப்பு' என்ற தலைப்பிட்ட நடைப்பயணங்களுக்குப் பொதுமக்களை அழைத்தோம். பொதுமக்களின் ஆர்வம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, எங்களைத் திகைப்படையச் செய்தது! நாங்கள் சாங்கிக்குத் திரும்பிச்செல்ல நூற்றுக்கணக்கானோருடன் சேவைப்படகுத் துறையில் வரிசையாகக் காத்திருக்கையில், சுபராஜ் இராஜதுரை உற்சாகமாக எழுச்சி உணர்வு பெற்றதாகக் கூறினார். இயற்கை சமூகம் ஒற்றைக் குரலாக ஒலிக்கவில்லை.

பின்னர், ஆய்வு மாணவர்கள் தீவின் வனவிலங்குகளை ஆராய்ந்தபோது, குறுமான் எங்களை வியப்பில் ஆழ்த்தியது; நாம் அதனை இழந்துவிடவில்லை என்பதை நாங்கள் கண்டோம். அதோடு, புனுகுப் பூனைகள், மந்திகள், காட்டுப் பன்றிகள் ஆகியவற்றுக்கும் உபின் தீவு உய்விடமாகத் திகழ்ந்தது. நாங்கள் மாதிரிப்பொருளாகச் சேகரித்த சாலைகளின் மருங்கிலுள்ள 3,000-க்கும் அதிகமான மீன்வால் பனைகளின் இனப்பெருக்கம், உணவுக்குப் பஞ்சமில்லை என்பதைக் காட்டியது.

தேசிய பூங்காக் கழகம் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் மறுபடியும் நட்டு வைத்தது. உபின் மீண்டும் பசுமையாகவும், பல்லுயிரினங்களின் உய்விடமாகவும் இருக்க முடியும் என்பதை நேரில் கண்டு அகமகிழ்ந்தேன். ஆனால் அந்த 10 ஆண்டுகால ஒத்திவைப்பு எங்கள் தலைக்கு மேல் கத்தியாகத் தொங்கிக் கொண்டிருந்தது, பின்பு 2013-ஆம் ஆண்டில் நகரச் சீரமைப்பு வாரியத்துடன் நடந்த உரையாடலில், 2002-ஆம் ஆண்டின் ஒத்திவைக்கப்பட்ட நிலமீட்புத் திட்டங்களால் நாங்கள் இன்னமும் கவலை அடைந்திருப்பதாகப் பகிர்ந்துகொண்டோம்.

உபின் தீவின் இயற்கை, சுற்றுச்சூழல், மரபுரிமை, மக்கள் அனைத்தும் சிங்கப்பூரின் எதிர்காலத்தின் ஒரு பகுதி என்பது தெளிவாகத் தெரியவந்தபோது, அந்தக் கவலை மிகுந்த கவனத்துடன் மனநிம்மதியாக மாறியது. இந்த முடிவுக்காகவே FUN அமைக்கப்பட்டு, 2014 முதல் உபின் தீவின் கலாசார, இயற்கை மரபுரிமைகளைப் பாதுகாக்க பற்பல முனைப்புகளை வழிநடத்தி இருக்கிறது.

### 3. இந்த உபின் திட்டத்தின் தொலைநோக்கைப் குறிப்பிடுகையில், நீங்கள் சிங்கப்பூரின் எதிர்காலத் தலைமுறைகளுக்கு உபின் தீவின் பல்லுயிரினப் பாதுகாப்பு குறித்து என்ன அறிவுரை வழங்குவீர்கள்?

22 ஆகஸ்ட் 2020 தேதியன்று, நகரமய சிங்கப்பூரில் வளர்ந்த எனது மாணவர்கள், ஐந்து மாணவர்களைக் கொண்ட குழுக்களாகப் பிரிந்து பல்வேறு இயற்கை சுற்றுச்சூழல்களை ஆராய்ந்தனர். அவர்கள் உபின் தீவுக்கு முதல்முறையாக அல்லது இரண்டாவது முறையாக வந்திருந்த போதிலும், ஓரியண்டல் பைய்டு ஹார்ன்பில், வைக்கோல் கொண்டை புல்புல், ஓரியண்டல் மேக்பை-ராபின், மீன்கொத்திப் பறவை, சிவப்பு கானங்கோழி ஆகிய பறவைகளின் கூக்குரல்களைக் கேட்டு லயித்துப் போனார்கள்.

இதைத்தான் அவர்கள் அனைவரும் பெறவேண்டும் என்பதே 20 ஆண்டுகளுக்குமுன் அவர்கள் பிறந்தபோது எங்களது எளிய விருப்பமாக இருந்தது என்பதை அவர்கள் உணர்ந்திருக்க மாட்டார்கள். பொதுவான தொலைநோக்கு எங்களை வழிநடத்துகையில், அவர்களும் உபின் தீவின் காப்பாளர்களாக விளங்கமுடியும்.

ஆக, இப்போது நாம் கொண்டாடுவோம்.

## ஓர் உபின் தொண்டூழியராகுங்கள்!

இயற்கையைப் பாதுகாப்பதில் நீங்கள் தீவிர ஆர்வம் கொண்டவரா? அப்படியானால், நீங்கள் ஏன் தேசிய பூங்காக் கழகத்துடன் சேர்ந்து உபின் தீவில் தொண்டூழியம் செய்யக்கூடாது?

உபின் தொண்டூழியர் திட்டம், உங்கள் அறிவாற்றலையும், திறன்களையும், நேரத்தையும் பகிர்ந்துகொண்டு நமது இயற்கை மரபுரிமைகளைப் பேணுவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. உபின் தொண்டூழியராக, உபினை நன்றாகப் புரிந்துகொள்ளவும் நீங்கள் எவ்வாறு பங்களிக்கலாமென அறியவும் ஆரம்பக்கட்டப் பயிற்சியுடன் உங்கள் பயணத்தைத் தொடங்குவீர்கள். உபின் தொண்டூழியர் பயிற்சியில் நீங்கள் பெறும் திறன்கள் உங்களை ஓர் இயற்கை வழிகாட்டியாக, வனவாழ்வின ஆராய்ச்சியாளராக, புகைப்படக் கலைஞராக, மேலும் பலவாறாகப் பரிணமிக்க உதவுகிறது.

## ஏன் தொண்டூழியராக வேண்டும்?

உபின் தொண்டூழியரின் பதிலைவிட இதற்குச் சிறந்த பதில் வேறெதுவும் இல்லை! உபின் தொண்டூழியராகத் தனக்குக் கிடைத்த அனுபவத்தைப் பகிர்கிறார் ஜாக் யாம்.

“நாம் சேவைப் படகுகளில் உபின் தீவுக்குச் செல்லும்போது நமக்கு அக்காலப் பயண அனுபவம் மீண்டும் கிடைப்பதை நான் நேசிக்கிறேன். இது கால இயந்திரப் பயணம் போல இருக்கும்! நான் இத் தீவின் வரலாறு பற்றியும் அதிகமாகத் தெரிந்து கொண்டேன்!

உபின் தீவின் பல்லுயிரினங்களைப் பற்றியும் நான் அதிகமாகத் தெரிந்து கொண்டேன். ஒரு பயணம் போல மற்றொரு பயணம் இருந்ததே இல்லை. எப்போதும் ஆர்வமூட்டும் எதையாவது கண்டறிவதற்கு அங்கே ஏதாவது இருக்கிறது. வெவ்வேறு நாட்களில், கீழ்த்திசை நாட்டுச் சாட்டைப் பாம்புகள், ஏகப்பட்ட பட்டாம்பூச்சிகள், நீள வால் மந்திகள், காட்டுப் பன்றிகள் மற்றும் பலதரப்பட்ட தாவரங்கள் ஆகியவற்றை நான் கண்டுள்ளேன்!

நான் தொண்டூழியராகச் செல்லும்போது, நமது நிலத்தில் உண்மையிலேயே என்னதான் இருக்கிறது என்பதை அறிவதற்காக ஆழ்ந்து இறங்கிச் செயற்படுவேன் – ஊடுருவி உயிரினங்கள், தலைநிலைக்கல் உயிரினங்கள் முதலியவற்றை அடையாளம் காண்பேன். இயற்கையின் சூழலில் நான் பாரத்தவற்றைப் பிறருக்குக் கூறுவதையும் நான் விரும்புகிறேன். நானாக இயற்கை நடை செல்லும்போது, ஆர்வமூட்டும் உண்மைகளை இந்தப் பூங்காவிற்கு வருபவர்களிடம் பகிர்ந்து கொள்வேன். இதன்வழி அவர்களின் பூங்கா அனுபவமும் செறிவடைகிறது!”

இன்றே **https://www.nparks.gov.sg/pulau-ubin/volunteers/volunteerforus** -இணையப்பக்கத்திற்குச் சென்று எங்களுடன் தொண்டூழியராகச் சேருங்கள்



ஜாக் யாம் (இடதுபுறமிருந்து முதல் நபர்) மற்றும் சக உபின் தொண்டூழியர்கள், செக் ஜாவா இன்டர்டைடல் சுற்றுலாக்களுக்கான வழிகாட்டிகளாகப் பயிற்சியில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம். இப்புகைப்படம் கொவிட்-19 பாதுகாப்பான இடைவெளி நடைமுறைகள் தொடங்கப்படும் முன்னர் எடுக்கப்பட்டது.

## வெவ்வேறு தொண்டூழியர்களுக்கு வெவ்வேறு பங்களிப்புகள்

இத்திட்டம் பலதரப்பட்ட தொண்டூழிய வாய்ப்புகளை வழங்குகிறது. ஒவ்வொன்றும் சாகசமான ஒன்றாக இருக்கும். அதோடு, புதிதாகக் கண்டறிய எப்போதும் ஏதாவது இருக்கும். தேசிய பூங்காக் கழக அதிகாரிகள், சக தொண்டூழியர்கள் ஆகியோரிடமிருந்து அறிவாற்றலையும் நுண்திறன்களையும் நீங்கள் பெறுவீர்கள். இதன்வழி, உங்களது தொண்டூழிய அனுபவம் செறிவாகவும் நிறைவாகவும் இருக்கும்.

உபினில் உள்ள தொண்டூழிய வாய்ப்புகளில் உள்ளடங்குவன:

**பறவைகளுக்கு வளையமிடுதல்**
பறவைகளுக்கு வளையமிடும் திட்டம், பறவை இனங்களைப் பற்றிய முக்கியமான தகவல்களை வழங்குகிறது, அவை எவ்வாறு பரவலாக வாழ்கின்றன, அவற்றின் இடப்பெயர்ச்சி, அவற்றின் இனப்பெருக்கக் காலங்கள், வாழ்விட விருப்பங்கள் ஆகிய தகவல்கள் இதில் உள்ளடங்கும். இத்திட்டத்தின் தொண்டூழியராக, நீங்கள் மூடுபனி வலை விரிக்கவும், தகவல் சேகரிக்கவும் உதவுவீர்கள்.

**தும்பிப் பூச்சிகளை உற்றுநோக்குதல்**
நமது தும்பிப் பூச்சிகளையும் ஊசித் தும்பிப் பூச்சிகளையும் பற்றி மேலும் அறிய, இயற்கையில் சமூகப் பங்களிப்பு (CIN) பல்லுயிரினங்களை உற்றுநோக்கும் தொடரின்கீழ் இடம்பெறும் குடிமக்கள் அறிவியல் திட்டத்தில் சேருங்கள். சிங்கப்பூரின் பல்வேறு இடங்களில் இப்பூச்சிகளின் எண்ணிக்கையைக் கண்டறிவதற்குத் தேவைப்படும் அடிப்படை கணக்கெடுப்பு ஆய்வுத் திறன்கள் உள்ளிட்ட திறன்களை நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்.

**வன மற்றும் படகு சுற்றுக்காவல்கள்**
உபின் தீவின் பல்லுயிரினங்களையும் நன்கு பாதுகாப்பதற்கு எங்களுக்கு உதவுங்கள்! நமது வனங்கள், கடலோரங்கள், ஆறுகள் ஆகியவற்றைக் கண்காணித்து, கள்ளவேட்டை போன்ற சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கண்டறிய நாம் சுற்றுக்காவல் பணியில் ஈடுபடுவோம்.

NATIONAL PARKS
FRIENDS OF UBIN NETWORK

Share your love for nature and animals at
**#NParksBuzz #AnimalBuzzSG**

# அறிவு புகட்டும் தீவு

உபின் தீவு பலதுறை சார்ந்த, மெய்யுணர்வுசார் கற்றலின் முக்கியமான மையமாகத் திகழ்கிறது. உபின் பல்லுயிரினச் செழிப்புக்கு மட்டுமன்றி, பழைய நினைவுகளை அசைபோடவும் நிகழ்காலத்தைக் கொண்டாடவும் ஏற்ற இடமாகவும் இருக்கவேண்டும் என்ற தொலைநோக்கு இலக்கு, உபின் நண்பர்கள் (FUN) அமைப்பினால் ஏற்படுத்தப்பட்டதாகும். இவ்வாறாக அடுத்த தலைமுறை, சமூகத்துடன் உறவாடி சிங்கப்பூரின் இயற்கை மற்றும் கலாசாரக் காப்பாளர்களாகப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு உபின் பொருத்தமான இடமாக இருக்கிறது.

## நமது கல்விப் பணிக்குழு

பல துறைகளைச் சேர்ந்த ஆர்வமிக்கக் கல்வியாளர்களைக் கொண்டுள்ள FUN கல்விப் பணிக்குழு, பள்ளிகளையும் உயர்கல்வி நிலையங்களையும் வெவ்வேறு பாடத்திட்டங்களில் செயல்முனைப்புடன் ஈடுபடுத்துகிறது. அவர்கள் தேசிய பூங்காக் கழகத்துடன் இணைந்து செயல்பட்டு, மெய்யுணர்வுக் கற்றலுக்கு ஏற்ற வசதிகளையும் வழங்குகிறார்கள். பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் முன்னோட்டக் கற்றல் பயணங்கள் நடத்தப்படுகின்றன. ஆசிரியர் சமூகத்திற்காக அறிமுகமாகும் கற்றல் கருத்தரங்கம், உபின் தீவின் இயற்கை மற்றும் கலாசார மரபுரிமைகளைப் பற்றி மாணவர்கள் எவ்வாறு மேலும் அறிந்துகொள்ளலாம் என்பதன் தொடர்பிலான யோசனைகளைப் பரிமாறிக்கொள்ளும் தளமாகவும் அமைகிறது.






FUN அமைப்பின் கல்விப் பணிக்குழு, உபின் தீவு வருகைகளில் ஒன்றில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம். இப்புகைப்படம் கொவிட்-19 பாதுகாப்பான இடைவெளி நடைமுறைகள் தொடங்கப்படும் முன்னர் எடுக்கப்பட்டது.



இயற்கையைப் பாதுகாக்கும் இளம் இதயங்கள் திட்டத்தில் பங்கேற்ற பங்கேற்பாளர்கள், பயிற்சியைப் பூர்த்திசெய்த சான்றிதழ்களுடன் எடுத்துக்கொண்ட படம். இப்புகைப்படம் கொவிட்-19 பாதுகாப்பான இடைவெளி நடைமுறைகள் தொடங்கப்படும் முன்னர் எடுக்கப்பட்டது.

## இயற்கையைப் பாதுகாக்கும் இளம் இதயங்கள்

தேசிய பூங்காக் கழகத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் வழிநடத்தும் இயற்கையைப் பாதுகாக்கும் இளம் இதயங்கள் திட்டம், சேவைக் கற்றல் மூலம் சிங்கப்பூர் இளையரிடையில் பல்லுயிரினச் செழிப்பைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை வளர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த இரண்டு நாள் திட்டத்தில், அவர்கள் தங்களது பாதுகாப்பு முயற்சிகளைப் பகிர்ந்து கொள்வதற்கான வகுப்பறை அங்கமும், மீண்டும் வனமாக்குதல், கடலோரத்தைச் சுத்தம் செய்தல், ஊடுருவும் உயிரினங்களை நிர்வகித்தல் போன்ற நடவடிக்கைகளும் உள்ளடங்கும்.

## நமது கல்விப் பணிக்குழு

எதிர்காலத் தலைமுறைகளுக்காக எண்ணற்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யும் பாக்கியம் FUN அமைப்புக்குக் கிடைத்தது. ஆற்றலும் ஆர்வமும் நிறைந்த பிள்ளைகளும் இளையர்களும், உபின் தீவின் இயற்கையைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் அதற்காகப் பங்களிக்கக்கூடிய வழிமுறைகளையும் கண்டறிகின்றனர். கடந்த ஆண்டுகளில் பள்ளிகள் பங்கேற்ற சில நடவடிக்கைகள் இவை!

### மை ஃபர்ஸ்ட் ஸ்கூல் பாலர்பள்ளி

24 ஆகஸ்ட் 2019 அன்று, கனிவன்பு தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, பாசிர் ரிஸ் புளோக் 637ல் அமைந்துள்ள மை ஃபர்ஸ்ட் ஸ்கூல் பாலர் பள்ளியிலிருந்து சுமார் 300 ஆசிரியர்கள், பிள்ளைகள், அவர்களது பெற்றோர்கள் ஆகியோர் உபின் தீவுக்கு வருகை தந்தனர். தீவில் அவர்கள் இருந்தபோது, கம்பத்தை ஆராய்ந்தனர், வண்ணத்துப் பூச்சிகளையும் நாரைக் கொக்குகளையும் பெக்கன் குவாரியில் கண்டறிந்தனர், அதோடு உபின் வாழும் ஆய்வுக்கூடத்தில் மரக்கன்றுகளையும் புதர்ச்செடிக் கன்றுகளையும் நட்டனர். இந்த வருகை, பாலர் பள்ளியின் "சுற்றுச்சூழலிடம் கனிவன்புடன் இருங்கள்" எனும் கருப்பொருளுக்கு ஏற்ப அமைந்தது, சிங்கப்பூர் கனிவன்பு தினத்தின் கருப்பொருளாக இந்தச் சொற்றொடரைப் பாலர் பள்ளி தேர்ந்தெடுத்திருந்தது.

> "மரக்கன்றுகள் நடும் பணியைச் செய்து முடிப்பதில் தங்கள் பிள்ளைகளின் விடாமுயற்சியையும் மனத்திடத்தையும் கண்டு பெற்றோர் பெரிதும் மகிழ்ந்தனர்.
>
> திருவாட்டி ஹார்டினி அப்துல் ஹமீத், நிர்வாக முதல்வர்"



உபின் வாழும் ஆய்வுக்கூடத்தில் பாலர்பள்ளிப் பிள்ளைகள் மரங்களுக்கு நீரூற்றும் படம். இப்புகைப்படம் கொவிட்-19 பாதுகாப்பான இடைவெளி நடைமுறைகள் தொடங்கப்படும் முன்னர் எடுக்கப்பட்டது.

### யேல் -NUS கல்லூரி

உபின் தீவின் பல்லுயிரினச் செழிப்பைப் பற்றிய ஆய்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, யேல்-NUS கல்லூரி மாணவர் குழு, உபின் வாழும் ஆய்வுக்கூடத்தைத் தங்களது ஆய்வுத்தளமாகச் சில மாதங்களுக்குப் பயன்படுத்தினர். இந்த ஆய்வுக்கூடத்தில் களப்பணிக் கருவிகளை நிறுவி, ஆய்வுக்கூடத்திலுள்ள நுண்ணோக்கிகளைப் பயன்படுத்தி ஆய்வுகளை நடத்தினர். ஆய்வின் முடிவில், தேசிய பூங்காக் கழக அதிகாரிகளுடன் பகிர்வு அங்கம் நடத்தி, தங்களது ஆய்வின் முடிவுகளை பகிர்ந்துகொண்டனர்.

> "தேசிய பூங்காக் கழகத்துடன் கூட்டிணைந்து செயற்பட்டது மிகவும் அருமையான அனுபவமாக அமைந்தது. இந்த வசதிகள் இல்லாமல், இந்த ஆய்வை நாங்கள் நடத்தியிருக்க முடியாது. எங்கள் மாணவர்களுக்கும் இதுபோன்ற களச் சுற்றுச்சூழலில் கற்பதற்கு இப்படியோர் அருமையான வாய்ப்பு கிடைத்திருக்காது. எனவே, இந்த அனுபவங்களை வழங்கி உதவிய உங்கள் அனைவருக்கும் நன்றி!!!
>
> டெய்லர் ஸ்லோயி, கள ஆய்வாளர், யேல்-NUS கல்லூரி"



உபின் வாழும் ஆய்வுக்கூடத்தில் மாணவர்கள் ஆய்வுக்கூட வசதிகளைப் பயன்படுத்தும்போது எடுக்கப்பட்ட படம். இப் புகைப்படம் கொவிட்-19 பாதுகாப்பான இடைவெளி நடைமுறைகள் தொடங்கப்படும் முன்னர் எடுக்கப்பட்டது.

### மெய்நிகர் கற்றல்

கொவிட்-19 பெருந்தொற்றின் கட்டுப்பாடுகளின் காரணமாக, உபின் கற்றல் அனுபவத்தை விரிவுபடுத்துவதற்குப் பள்ளிகள் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தின. மெய்நிகர் சுற்றுலாக்கள், காணொளி துணுக்குகள் போன்ற இணையக் கருவிகள், தளங்கள் ஆகியவற்றின்மூலம், காமன்வெல்த் உயர்நிலைப் பள்ளி, நன்யாங் பெண்கள் உயர்நிலைப் பள்ளி உள்ளிட்ட பள்ளிகள் உபின் தீவைப் பற்றி அறிந்துகொண்டு குழு கலந்துரையாடல்களில் ஈடுபட்டன.

காமன்வெல்த் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடித்து தேசிய பூங்காக் கழகத்துடன் இணையம்வழி கலந்துரையாடலில் பங்கெடுத்தபோது எடுக்கப்பட்ட காணொளி.

